வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017
## Term Examination, November - 2017

| தரம் :- 12 (2019) | இந்து சமயம் | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி I

**01) 01 முதல் 05 வரையான வினாக்களில் 5 விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஏதோவொரு காரணத்தால் ஏனையவற்றுடன் பொருந்தவில்லை பொருந்தாததைத் தெரிக.**

01. 1) சிவன் 2) சக்தி 3) வருணன் 4) நாகம் 5) வனதேவதை

02. 1) அர்த்தம் 2) சர்க்கம் 3) பிரதிசர்க்கம் 4) வம்சம் 5) வம்சானு சரிதம்

03. 1) முண்டக 2) சாந்தோக்கிய 3) பிரகதாரணிய 4) பிரசன 5) பௌஷ்டிகாணி

04. 1) கர்ஷணம் 2) பிரதிஷ்ட்டை 3) கொடியேற்றம் 4) உற்சவம் 5) பிராயச்சித்தம்

05. 1) கடையிற்சுவாமிகள் 2) செல்லப்பாசுவாமிகள் 3) சிவாக்கியர் 4) நவநாத சித்தர் 5) சித்தானைக்குட்டிச் சுவாமிகள்.

**02) 06 முதல் 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள 5 சோடிச் சொற்களில் ஒரு சோடி ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத சோடியைத் தெரிக.**

06. 1) மாணிக்க வாசகர் - திருவாசகம்
2) திருமூலர் - திருமந்திரம்
3) கச்சியப்பர் - கந்தபுராணம்
4) சேக்கிழார் - பெரியபுராணம்
5) கடவுள்மாமுனிவர் - சிவரகசியம்

07. 1) உத்தாலகர் - சுவேதகேது
2) யமன் - நசிகேதன்
3) ஞாக்ஞவல்கியர் - மைத்ரேயி
4) நாரதர் - இந்திரன்
5) ஜனகன் - ஞாக்ஞவல்கியர்

08. 1) சிவாகமங்கள் - காரணம்
    2) வைணவம் - பஞ்சராத்தினம்
    3) சாக்தம - தந்திரம்
    4) காணாபத்தியம் - வைகாசனம்
    5) கௌமாரம் - குமார தந்திரம்

09. 1) பூதத்தாழ்வார் - முதல் திருவந்தாதி
    2) தொண்டரடிப்பொடியாழ்வார் - திருமடல்
    3) ஆண்டாள் - திருப்பாவை
    4) பெரியாழ்வார் - திருப்பல்லாண்டு
    5) நம்மாழ்வார் - திருவிருத்தம்

10. 1) இருக்குவேதம் - ஐதரேயப்பிராமணம்
    2) அதர்வவேதம் - சாமவிதானப் பிராமணம்
    3) கிருஷ்ணயசுர வேதம் - தைத்திரிய பிராமணம்
    4) சுக்கிலயசுர்வேதம் - சதபத பிராமணம்
    5) சாமவேதம் - சாந்தோக்கிய பிரமாணம்

**03) 11 முதல் 15 வரையுள்ள வினாக்களில் "அ" என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. "ஆ" நிரலுக்கு ஏற்ற வகையில் "ஆ" நிரலுடன் பொருத்தமாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள சேர்மானத்தை தெரிக.**

11.

| அ | ஆ |
|---|---|
| 1) சதுர் வேதி மங்கலம் | A) வணிகர்கள் மடங்கள் |
| 2) திருமுக்கூடல் | B) விஜய நகர காலம் |
| 3) திருக்காமக் கோட்டம் | C) கிருஷ்ண சந்தம் |
| 4) மண்டலிதர் | D) பிரமதேயம் |
| 5) சானாவதிம்மர் | E) அம்மன் வழிபாடு |

1) BADCE   2) EDBCA   3) DAERC   4) DCBEA   5) ACBED

12.

| அ | ஆ |
|---|---|
| 1) மாக்ஸ் முல்லர் | A) தர்மசாத்திரம் |
| 2) அக்கினி | B) அதர்வம் |
| 3) பௌஷ்டிகாணி | C) வேதகாலம் |
| 4) மகாபாரதம் | D) தேவதூதன் |
| 5) வியாவகாரகாண்டம் | E) வியாசர் |

1) BCADE   2) CDBER   3) DCEBA   4) ACBED   5) ECDBA

13. அ | ஆ

1) திருவருட்பயன் — A) குமரகுருபரர்
2) பெரிய புராணம் — B) காரைக்காலம்மையார்
3) சகலகலாவல்லிமாலை — C) உமாபதி சிவாச்சாரியார்
4) திருப்புகழ் — D) சேக்கிழர்
5) அற்புதத்திருவந்தாதி — E) அருணகிரிநாதர்

1) DECBA 2) BCDAE 3) EDCAB 4) CDAEB 5) ACBED

14. அ | ஆ

1) தஜ்ஜலன் — A) அந்தணன்
2) சுக்கிலயசுர் — B) ரிதஷய கோபா
3) வேட்பித்தல் — C) இருக்குவேதம்
4) வருணன் — D) சதருத்தியம்
5) கௌஷீதகீயப் பிராமணம் — E) பிரமம்

1) DECBA 2) BCDAE 3) EDCAB 4) CDAEB 5) ACBED

15. அ | ஆ

1) கர்ணக்கூடு — A) கோயிலின் வாசலிலே கட்டப்படுவது
2) வேதிகை — B) உபபீடத்தின் மேல் கட்டப்படுவது
3) பொதிகை — C) கோபுரத்தில் இடம்பெறும் உறுப்பு
4) அதிஷ்டாணம் — D) ஸ்தம்பத்தை தாங்கும் உறுப்பு
5) கோபுரம் — E) தூணை அழகு படுத்தும் உறுப்புக்களில் ஒன்று

1) ABCDE 2) BCEDA 3) CEBDA 4) DBECA 5) ECBDA

e-தக்ஸலாவ The National e-learning Portal for the General Education

04) பின்வரும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு 16 – 20 வரையான வினாக்களுக்கு விடை தருக.

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>குறிஞ்சி | B<br>பதிகங்கள் | C<br>ரிதஸயகோபா | D<br>வேதம் | E<br>வர்ணன் |
| F<br>அறிவு | G<br>தாண்டகம் | H<br>சுவாஹா | I<br>முருகன் | J<br>வஷ்ட் |

16. சைவ சமயத்தின் பொது நூலுடன் தொடர்புடைய தொகுதி

1) DB 2) GF 3) DF 4) DE 5) JE

17. சங்க கால வழிபாட்டுடன் தொடர்புடைய தொகுதி

1) AE 2) AI 3) EF 4) CI 5) AB

18. யாகங்களில் மிதிர்களுக்கு உணவளிக்கும் பொழுது வேட்போர் ஒலிக்கும் மந்திரங்களை குறிக்கும் எழுத்து

1) HE 2) FA 3) JC 4) HJ 5) BJ

19. வேத கால ஒழுக்கத்துடன் தொடர்புடையது

1) CE 2) EJ 3) CD 4) HE 5) JE

20. பல்லவர் கால பக்தி இயக்கத்தின் வெற்றிக்கு அடிப்படையாய் அமைந்த முக்கிய இலக்கிய வடிவங்கள்

1) JB 2) HG 3) GF 4) AD 5) BG

**05) 21 – 25 வரையான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

21. வேதாங்கங்கள் எனப்படுபவை

1) சங்கிதைககள், பிராமணங்கள், ஆரணியங்கள், உபநிடதங்கள்
2) ஆயுர் வேதம், அர்த்த வேதம், தனுர் வேதம், காந்தர்வ வேதம்
3) நியாயம், மீமாம்சை, புராணம், ஸ்மிர்தி
4) சிட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், கல்பம், சந்தஸ்
5) சங்கிதை, தர்மசாத்திரம், ஸ்மிர்தி, வேதாந்தம்

22. இந்து சமூக நன்மைக்காகப் பிரயோகிக்கப்படும் பௌஷ்டிகாணி எனும் மந்திரங்களைக் கொண்ட வேதம்

1) இருக்கு வேதம் 2) யசுர்வேதம் 3) சாம வேதம்
4) அதர்வணவேதம் 5) காந்தர்வ வேதம்

23. விஸ்ணு புராணங்கள் அடங்கும் தொகுதி

1) கருட புராணம், நாரதீய புராணம்
2) பத்ம புராணம், கூர்ம புராணம்
3) மச்சய புராணம், கருட புராணம்
4) பதும புராணம், நாரதீய புராணம்
5) நாரதீய புராணம், பௌடிய புராணம்

24. வித்தியா விநோதன் என்ற விருதுப் பெயர் கொண்ட பல்லவ மன்னன்

1) 2ம் நரசிம்ம மன்னன் 2) மாமல்லன் 3) இராசசிம்மன்
4) பரமேஸ்வர வர்மன் 5) நந்திவர்மன்

25. சிவாகமங்கள் 28 இல் இன்று பிரதானமானவையாகக் கருதப்படுவது

1) சிவபேதம், உருத்திர பேதம் 2) காமிகம், வாதுளம் 3) கிரணம், பௌட்கரம்
4) காமிகம், சிந்தியம் 5) காரணம், விமலம்

(25X2=50 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

## பகுதி II

➢ **பகுதி "அ" விலிருந்து எவையேனும் 2 வினாக்களையும் பகுதி "ஆ" விலிருந்து எவையேனும் 3 வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக 5 வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

### பகுதி "அ"

01. "உலகிலே தோன்றிய பழைமை மிக்க சமயங்களுள் இந்து சமயமுமொன்று" அந்த வகையில் "இந்து மதம் கி.மு. காலம் தொட்டு இன்று வரை நிலைத்து நிற்பது" இதனை அடிப்படையாகக் கொண்டு

அ) இந்து சமயம் பற்றி அறிந்து கொள்வதற்குரிய மூலாதாரங்களைக் குறிப்பிடுக?

ஆ) இந்து சமயத்தின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுக.

*(4+6=10 புள்ளிகள்)*

02. "சிந்து வெளியிலே கண்டெடுக்கப்பட்ட தொல் பொருட் சான்றுகள் வெளிப்படுத்தி நிற்கும் இந்து சமயச் சார்புடைய கருத்துக்கள் ஊகங்கள் என்பதைக் காட்டிலும் அவை இந்து சமய நம்பிக்கைகளை உறுதிப்படுத்துவனவாயுள்ளன"

அ) சிந்து வெளியின் காலத்தையும் அதன் பிரதான நகரங்களைக் குறிப்பிடுக?

ஆ) சிந்து வெளியிலே கண்டெடுக்கப்பட்ட தொல் பொருட் சின்னங்களெனக் கருதப்படுபவை எவை?

இ) சிந்து வெளி கால சமய நிலை பற்றி விளக்குக?

(2+3+5=10 புள்ளிகள்)

03. "இந்து சமய இலக்கியங்களுள் வேதங்கள் மிகவும் தொன்மை வாய்ந்த புனித நூல்களாகும்"

அ) வேதம் என்ற சொல்லின் பொருள் யாது?

ஆ) வேதங்களின் மறுபெயர்கள் யாவை?

இ) வேதகால சமய நிலை பற்றி விளக்குக?

(2+3+5=10 புள்ளிகள்)

### பகுதி "அ"

04. "புராணங்கள் தெய்வங்களின் வீரதீரச் செயல்களை கதை வடிவில் கூறுகின்றன"

அ) புராணம் என்பதன் பொருள் யாது?

ஆ) புராணங்களை வகைப்படுத்துக?

இ) புராண இலக்கியங்கள் பிற்காலச் சமய மரபுகளில் செலுத்திய செல்வாக்கு பற்றி குறிப்பிடுக?

(2+3+5=10 புள்ளிகள்)

05. "சங்க கால மக்களின் தெய்வ நம்பிக்கைகளும் வழிபாடுகளும் அவர்கள் தம் சமயத்தைப் பிற்காலத்தில் உயர் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது"

அ) சங்க காலம் எனப்படும் காலப்பகுதி யாது?

ஆ) சங்க காலத்தில் வழிபட்ட தெய்வங்கள் எவை?

இ) சங்க காலத்தில் காணப்பட்ட வழிபாட்டு முறையை சுருக்கமாகத் தருக?

(2+3+5=10 புள்ளிகள்)



The National e-Learning Portal for The General Education

06. “சிவாகமங்கள் சைவத்திருக்கோயில் அமைப்பு முறைகளையும் சிவாலயக்கிரியை முறையையும் சிறப்பாக விளக்குகின்றன”

அ) ஆகமம் என்ற சொல்லின் பொருள் யாது?

ஆ) சிவாகமங்களின் வகையையும் தொகையையும் தருக?

இ) ஆகமம் கூறும் பொருள் மரபினை விளக்குக?

(2+3+5=10 புள்ளிகள்)

07. “இந்து சமுதாயத்திற்கு அறங்கூற எழுந்த இலக்கியங்களே இதிகாசங்களாகும்”

அ) இதிகாசம் என்பதன் பொருள் யாது?

ஆ) இதிகாசங்களின் பெயர்களும், அதனை எழுதியவர்களின் பெயர்களையும் தருக?

இ) இதிகாசம் கூறும் அறக்கருத்துக்களைச் சுருக்கமாகத் தருக?

(2+3+5=10 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றில் இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக?

அ) வருணன்

ஆ) ஆதீனங்கள்

இ) காரைக்கால் அம்மையார்

ஈ) இந்து சமய மரபில் மனித நேயம்

(2X5=10 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education